# BSNL ஊழியர் சங்கம்

## தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்**:136 **தேதி**:-25.10.2016

**அகில இந்திய மாநாட்டு வரவேற்புக் குழுக் கூட்டம்**

அன்பார்ந்த தோழர்களே,

ஜூன் 10- ஆம் தேதி தூத்துக்குடியில் நடைபெற்ற வெற்றிவிழா கூட்டத்தில் அகில இந்திய மாநாட்டிற்காக அமைக்கப் பட்ட வரவேற்புக் குழுவின் முதல் கூட்டம் அக்டோபர் 20 அன்று உற்சாகத்துடன் சென்னை- வி.கே.எம். திருமண மண்டபத்தில் நடைபெற்றது. வரவேற்புக்குழுவின் செயல் தலைவர் தோழர். எஸ். செல்லப்பா தலைமையேற்று நடத்தினார். வரவேற்புக்குழுவின் பொதுச் செயலாளர் தோழர். பாபு ராதாகிருஷ்ணன் அனைவரையும் வரவேற்றார்.

வரவேற்புக்குழுவின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான தோழர். டி.கே. ரங்கராஜன் சிறப்புரையில், தற்போதைய மத்திய அரசின் பொதுத் துறை விரோத மக்கள் விரோத கொள்கைகள் வேகமாக அமுல்படுத்தப் படும் சூழ்நிலையில் நடைபெறும் இம்மாநாடு நமது பொதுத் துறை பாதுகாப்பிற்காக மட்டுமன்றி, முறை சாரா தொழிலாளர்களை அணிதிரட்டுவது குறித்தும், அனைவருக்கும் கல்வி, அனைவருக்கும் வேலை உள்ளிட்ட ஜனநாயக உரிமைகளுக்காகவும் செயல் திட்டங்களைத் தீட்ட வேண்டும் எனக் கேட்டு மாநாடு வெற்றி பெற வாழ்த்தினார்.

தீண்டாமை ஒழிப்பு முன்னணியின் தலைவர் தோழர். பி. சம்பத் ஆற்றிய சிறப்புரையில், ஊழியர்களின் நம்பிக்கையை பெறுவதற்கு நமது சங்கம் கொள்கை அடிப்படையில் சமரசமின்றிப் போராடிப் பெற்றுள்ள வெற்றிகளே காரணம் என்று குறிப்பிட்ட அவர், அவை மேலும் தொடர்வதற்கு இம்மாநாட்டின் வெற்றி உதவும் என்பதைச் சுட்டிக் காட்டி வாழ்த்தினார்.

சிஐடியு சங்கத்தின் தமிழக பொதுச் செயலாளர் தோழர். ஜி. சுகுமாரன் பேசும்போது, ரிலையன்ஸ் ஜியோ நிறுவனத்தின் விளம்பர தூதுவராக செயல்படும் ஒருவர் நாட்டின் பிரதமராக பணியாற்றுவதையும், அரசாங்கமே தனியார் நிறுவனங்களுக்கு ஆதரவாக உள்ள கடும் சவாலான சூழ்நிலையில் நடைபெறும் இம்மாநாடு வெற்றி பெற வேண்டும் என வாழ்த்தினார்.

நமது அகில இந்திய பொதுச் செயலாளர் தோழர். பி. அபிமன்யு, BSNL -இல் செயல்படும் அனைத்து சங்கங்களை ஒன்றுபடுத்துவதிலும், போராட்டங்கள் மூலம் BSNL -ஐப் பாதுகாப்பதிலும், ஊழியர் உரிமைகளை வென்றெடுப்பதிலும் BSNL ஊழியர் சங்கம் காட்டிய உறுதிப்பாடுதான் தொடர் அங்கீகாரத்திற்குக் காரணம் எனவும், ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கும், ஓய்வூதியர்களுக்கும் பெற்றுத் தந்துள்ள உத்தரவுகளே நமது சாதனைகளின் சிகரம் எனவும், சேவைத் தரத்தை மேம்படுத்தும் பணிக் கலாச்சார மாற்றத்தைக் கையிலெடுத்து கடந்த இரண்டு ஆண்டுகளாக BSNL ஊழியர் சங்கம் எடுத்து வரும் நடவடிக்கைகளின் விளைவாக, நிறுவனத்தின் வருமானம் உயர்ந்து வருவதைச்

சுட்டிக் காட்டி, விரைவில் லாபமீட்டும் நிலைமை ஏற்படும் என்ற நம்பிக்கையையும் புள்ளி விவரங்களுடன் தெரிவித்தார். அகில இந்திய மாநாட்டை நடத்த உளப்பூர்வமாக தமிழகம் முன்வந்ததற்கு நன்றி தெரிவித்த அவர், இம்மாநாடு வரலாற்றில் மைல்கல் மாநாடாக இடம்பெறும் எனவும் குறிப்பிட்டு உரையாற்றினார்.

அகில இந்திய இன்ஷூரன்ஸ் சங்கத்தின் தென்மண்டல பொதுச் செயலாளர் தோழர். செந்தில்குமார், அகில இந்திய அஞ்சல் நான்காம் பிரிவு ஊழியர் சங்கத்தின் மாநிலச் செயலாளர் தோழர். ஜி. கண்ணன், உழைக்கும் பெண்கள் ஒருங்கிணைப்புக் குழு மாநில அமைப்பாளர் தோழியர். ப. இந்திரா ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். AIIEA தென் மண்டல துணைத் தலைவர் தோழர். க. சுவாமிநாதன், BSNL CCWF அகில இந்திய துணைத் தலைவர் தோழர். எம். முருகையா, துணைப் பொதுச் செயலாளர் தோழர். சி. பழனிச்சாமி, TNTCWU மாநிலச் செயலாளர் தோழர். சி. வினோத் குமார், சென்னை தொலைபேசி மாநிலச் செயலாளர் தோழர். கே. கோவிந்தராஜ், AIBDPA மாநிலச் செயலாளர் தோழர். சி.கே.நரசிம்மன் ஆகிய தலைவர்கள் இக்கூட்டத்தில் பங்கேற்றனர்.

சிஐடியு தமிழக துணைப் பொதுச் செயலாளர் தோழர். ஆர். கருமலையான் நிறைவுரையாற்ற, வரவேற்புக் குழு பொருளாளர் தோழர். கே. சீனிவாசன் நன்றியுரையுடன் கூட்டம் நிறைவுற்றது.

தமிழகம் முழுவதிலுமிருந்தும் சென்னையிலிருந்தும் திரளான தோழர், தோழியர் கலந்து கொண்டு எழுச்சியுடன் பங்கேற்றது மாநாட்டின் வெற்றிக்கு கட்டியம் கூறுவதாக அமைந்தது. பல்வேறு அமைப்புகளின் தலைவர்கள் இம்மாநாட்டை தோளோடு தோள் நின்று நடத்திக் கொடுக்க உத்தரவாதம் அளித்ததும், பெருகி வரும் ஊழியர்களின் உற்சாகமும் நமக்கு உத்வேகம் ஊட்டியுள்ளன. இந்த உற்சாகப் பெருக்கோடு அகில இந்திய மாநாட்டை வெற்றிகரமாக நடத்திடுவோம் !

வாழ்த்துக்களுடன்,

தோழமையுடன்,

(A.**பாபு ராதாகிருஷ்ணன்**)
**மாநில செயலாளர்**